# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.129/2020 | Age :53 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW8/ PW-7 | |
| Name :ராஜேஷ்கண்ணன், உதவி ஆய்வாளர். | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 10.06.2024.**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1, 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2, 4 வது எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 09.09.2020 ம் தேதி திருநீலக்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது திருநீலக்குடி காவல் நிலைய தலைமை காவலர் குமார் என்பவர் 06.09.2020 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நரசிங்கன்பேட்டை கன்னியம்மன்கோவில் தெருவை சேர்ந்த செந்தில்குமார்

மனைவி உமா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் ஆஜராகி நிலைய சமுதாய பணிப்திவேடு மனு ரசீது எண் 194/2020 வழங்கி நிலுவையில் இருந்த வழக்கின் கோப்பினை நான் பார்வையிட்டு அன்றைய தினம் காலை 9 மணிக்கு நிலைய குற்ற எண் 941/2020 ல் சட்டபிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 10 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் காந்திமதி மற்றும் சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் உமா, செந்தில்குமார், வெனிஸ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் அன்றைய தினம் மதியம் 1 மணியளவில் எதிரி சிலம்பரசன் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்த எதிரிகள் சிலம்பரசன் மற்றும் மேகநாதன் ஆகியோரை அடையாளம் கண்டு காரணம் கைது செய்து நிலையம் கொண்டு வந்து உரிய நடைமுறைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் மற்ற எதிரிகள் கவியரசன் மற்றும் தென்னரசன் ஆகியோர் மாண்புமிகு தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் அவர்களை வழக்கில் கைது செய்யவில்லை. 29.09.2020 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனை சென்று அசா1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்

சுமித்ரா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அசா1க்கான காயச்சான்று பெற்று வந்தேன். மேற்படி காயச்சான்றில் அசா1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கப்பட்டிருந்ததால் வழக்கின் சட்ட பிரிவுகளை 294(பி), 323, 354, 506(1) இதச விலிருந்து சட்ட பிரிவுகள் 294(பி), 325, 354, 506(1) இதச வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(மேற்படி சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1வது எதிரிக்கு எதிராக 294(பி), 325, 354, 506(1) இதச வின் படியும், 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக 294(பி) இதசவின் படியும் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**